DEREK PRINCE
MINISTRIES - INDIA

இலவச இதழ்!



தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடை போடுதல்

– பகுதி 4

மன அமைதி

“தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தின் வழியாக நடந்து செல்லுதல்” என்ற நம்முடைய தற்போதைய தொடரில், நம்முடைய வாழ்வில் எழும்பும் பொதுவான பிரச்சனைகளை வேதாகமத்தின் அடிப்படையில் கையாளுவது எப்படி என்பதில் கவனம் செலுத்தி வந்துள்ளோம். வாழ்வின் பல பிரச்சனைகளை, அச்சூழ்நிலைக்கு ஏற்ற தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தங்களை கண்டுப்பிடித்து, சுதந்தரிப்பதினால் எப்படி கையாளுவது என்பது நடைமுறையாக நான் இப்போதனைகளின் வழியாக காண்பிக்க முயற்ச்சித்துள்ளேன். இந்த கடிதத்தின் வாயிலாக, நம்முடைய காலத்தின் மிக பொதுவான பிரச்சனையாகிய மனச்சோர்வை குறித்து நான் உங்களுடன் பேச போகிறேன். உண்மையான மன அமைதியை நீங்கள் எப்படி அடைய முடியும் என்பதை நான் காண்பிக்க முடியும் என்று நம்புகிறேன்.

விடுதலைக்கான தேவை

நம்முடைய தற்காலத்து கலாச்சாரத்தில், பெருகிக்கொண்டிருக்கும் பல்வேறு அழுத்தங்களுக்கு நாம் ஆளாகிறோம் என்பதை ஆரம்பத்திலிருந்தே புரிந்துக்கொள்ள வேண்டும். சில உதாரணங்களை கொடுக்கிறேன். சகவயதுள்ளோரின் அழுத்தம் என்பது இன்று பொதுவான ஒன்று - அதாவது சம வயதானவர்களின் குழு அல்லது குறிப்பிட்ட சமுதாய குழுவிலுள்ள மற்றவர்களைப்போலவே இருக்க வேண்டும் என்ற அழுத்தம். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், பள்ளியில் படிக்கும் பிள்ளைகள், மற்ற பிள்ளைகள் செய்பவைகளையே செய்ய வேண்டும் என்ற அழுத்தத்தை தனக்குள் உணருகிறார்கள். மற்றவர்கள் பேசுகிறபடியால், தாங்களும் கெட்ட வார்த்தைகளை பேசுதல் போன்ற பல காரியங்களை செய்து, அந்த குழுவினுள் தனி நபராக காணப்படாமல் இருக்க பிள்ளைகள் பெறும் அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். வயது செல்ல செல்ல, வயது மற்றும் சமுதாயக் குழுக்களால் வரும் அழுத்தங்கள் இதே போன்று தொடருகின்றன.

“பக்கத்து வீட்டுக்காரர்களுடன் சமநிலைப்படுதல்” என்று இதை வயது வந்த சமுதாயத்தில் நாம் அழைக்கிறோம். வயது வந்தவர்கள் மத்தியிலும், தொடர்ந்து மற்றவர்களை போல இருக்க அல்லது அவர்களுக்கு சமமாய் நடக்க, ஓயா அழுத்தம் இருந்துக்கொண்டே இருக்கிறது. இது பல நேரங்களில் நமது உள்ளான தன்மைக்கும், உண்மையான குணநலன்களுக்கும் மாறானதாக இருக்கும். பொருளாதார அழுத்தம் இன்னொரு விதமான அழுத்தமாக இருக்கிறது - நம்முடைய பொருளாசைகளை திருப்தி செய்து, நம்முடைய முதிர்வயதிற்காக போதுமான பணத்தை சேர்த்து வைப்பதற்கும் சம்பாதிக்கவேண்டிய ஓர் அழுத்தம். இன்னும் அதிக பணத்தை பெற வேண்டும் என்ற அழுத்தம் தொடர்ந்து இருப்பது போலவே தோன்றுகிறது. உண்மையை சொன்னால், மக்கள் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும், அது அவர்களுக்கு போதுமாக தோன்றுவதேயில்லை.

ஜீவன் மற்றும் ஆரோக்கியத்திற்கான போராட்டங்கள்

“வாழ அழுத்தம்” போன்ற இன்னும் சில அடிப்படை அழுத்தங்கள் உள்ளன. வியாதி மற்றும் பெலவீனங்களுக்கு விரோதமாக நாம் ஒவ்வொருவரும் ஒரு தொடர் போராட்டத்தை எதிர்கொள்ளுகிறோம். சிலருக்குள் மரணத்தில் முடிவடைய கூடிய வியாதி கண்டறியப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்கு தலை மேல் ஒரு மரண தண்டனை வைக்கப்பட்டதுபோலான அழுத்தம் ஏற்படுகிறது. ஒரு நபர் எதிர்கொள்ளக்கூடிய அழுத்தங்களில் இது மிக பாரமானவைகளில் ஒன்றாகும்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், அச்சுறுத்தும், குற்றஞ்சுமத்தும் அல்லது சித்திரவதை செய்யும் எண்ணங்களை தொடர்ந்து கொண்டு வரும் ஒரு உள்குரல் இருக்கும். ஒரு குரல் கேட்கும் போது, அதற்கு பின்னணியில் ஒரு நபர் உண்டென்பதை புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது. ஒரு குரலின் ஒலிப்பு, ஒரு நபரின் பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது.

நாம் கேட்கிற அந்த குரல் நம்மை குற்றஞ்சுமத்துவதாக அல்லது சித்திரவதை செய்வதாக இருந்தாலோ, அந்த குரலுக்கு பின் இருப்பது சாத்தான் என்பதை நாம் நிச்சயித்துக்கொள்ள முடியும். பிசாசு குற்றஞ்சுமத்துகிறவன் என்று அழைக்கப்படுவதை நினைவில் கொள்ளுங்கள். உங்களை உந்தித்தள்ளி,

தூண்டும் ஒரு குற்றஞ்சுமத்தும் சத்தம் உங்கள் மனதில் இருக்கும் போது - சாத்தான் நிச்சயமாக உங்கள் வாழ்வில் கிரியை செய்துக்கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் அறிந்துக்கொள்ளலாம்.

பொதுவான தாக்குதல்கள்

மக்களுடை மனதிற்கு விரோதமாக, சத்துருவானவன் பல்வேறு விதமான குற்றச்சாட்டுகளை கொண்டு வருகிறான். ஒரு பொதுவான குற்றச்சாட்டு என்னவென்றால்: தேவன் உன்னை நேசிக்கவில்லை. அந்த குற்றச்சாட்டை நம்புவதின் இறுதியான விளைவு என்னவென்றால், தனிமைப்படுதல் மற்றும் தள்ளப்படுதலின் உணர்வுகளை கொள்வது தான். உங்கள் வாழ்க்கையை தவிற மற்றெல்லாருடைய வாழ்க்கைக்கும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருப்பது போல உணருவீர்கள்.

இன்னொரு பொதுவான குற்றச்சாட்டு என்னவென்றால்: நீ எப்போதுமே தோல்வியுற்றவனாகவே இருப்பாய். சில நேரங்களில் இப்படிப்பட்ட வார்த்தைக்காக, நமக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் பெற்றோராலோ, கணவன் மனைவியாலோ பேசப்படலாம். அவர்களுடைய செய்தி தொடர்ச்சியாகவும், தெளிவாகவும் “நீ வாழ்வில் எத்தனை முறை தோல்வியடைந்து விட்டாய், இனி வாழ்வில் தோல்வியை தவிற உனக்கு வேறு வழியே இல்லை” என்பதாக இருக்கும்.

இன்னொரு சித்திரவதை செய்யும் எண்ணம் என்னவென்றால்: உனக்கு பைத்தியம் பிடித்துக்கொண்டிருக்கிறது. தங்கள் குடும்பத்தில் மற்றவர்களுக்கு நடந்து கொண்டு வரும் ஒரு காரியம், அடுத்ததாக தங்களுக்கு தான் நடக்க போகிறது என்று கூறும் ஒரு குரலை எத்தனை பேர் கேட்டிருக்கிறார்கள் என்பதை, ஆலோசனை கூறும் நேரங்களில் கேள்விப்பட்டு, நான் மிகவும் ஆச்சரியப்பட்டது உண்டு. இது மிகுந்த வேதனையை அளிக்கும் ஒரு விதமான சித்திரவதை. சரீர வலிகள் மற்றும் வியாதியின் அறிகுறிகளோடு சம்பந்தப்பட்ட தாக்குதல்களுமுண்டு. தன் சரீரத்தில் வியாதியே இல்லாதிருந்தும், ஒரு நபர், தனக்கு உண்டாயிருக்கிற வலி, புற்றுநோயால் தான் வந்திருக்கிறது என்று எண்ணி, சித்திரவதைக்குள்ளாக்கப்பட கூடும். ஒரு வேளை உங்களுக்கு எந்த பிரச்சனையுமே இல்லாதிருக்க கூடும். ஆனால் சரீரத்தில் உண்டாயிருக்கும் வலியினால் பயந்து, அசைக்கப்பட்டு, அந்த தொல்லைக்கொடுக்கும் எண்ணங்களுடன் போராட நீங்கள் எழும்புவதில்லை.

“நான் பயந்த காரியம்...”

இந்த கடிதத்தில் நாம் பார்க்கும் மன ரீதியிலான சித்திரவதையை, வேதத்தில் உள்ள பக்தனாகிய யோபு அனுபவித்தார். அந்த காரியத்தை அவர் மிக தெளிவாகவும், சுருக்கமாகவும் எடுத்துக் கூறினார்.

> *என் போஜனத்துக்கு முன்னே எனக்குப் பெருமூச்சு உண்டாகிறது; என் கதறுதல் வெள்ளம்போல் புரண்டுபோகிறது. நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது. (யோபு 3:24 - 25)*

யோபு சொன்ன இதே வார்த்தைகள், நமது தற்காலத்து சமுதாயத்திலுள்ள எண்ணற்றவர்களுக்கு உண்மையாக இருக்கிறது. “நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது.” நீங்கள் என்ன காரியத்திற்கு அஞ்சுகிறீர்களோ, பயம் அதற்கு வாசலை திறக்கிறது. புற்றுநோய் சிலரில் ஏற்படுவதற்கு காரணம், அதை குறித்த அவர்களுடைய பயமாகவே இருக்கக்கூடும். அதே போல், மக்களுக்குள் பித்தம் பிடித்தலுக்கு ஒரு முக்கிய காரணம் அவர்களுக்குள் இருக்கும் பயம் தான்.

நம்மீது கூடுதலான பிரச்சனைகளை கொண்டு வர, பிசாசு பயத்தை ஒரு தூண்டுகோலாக பயன்படுத்துகிறான். “நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது. எனக்கு சமாதானமில்லை, அமைதல் இல்லை; எனக்கு குழப்பம் தான் இருக்கிறது, இளைப்பாறுதல் இல்லை.”

இது தான் உங்கள் நிலைமையா? இது உங்களை விவரிக்கின்றதா? அப்படியானால் ஒரு தீர்வு உண்டென்பதை நீங்கள் அறிய நான் விரும்புகிறேன். நம்முடைய வாழ்வில் நுழைய சாத்தான் பயன்படுத்தும் வாசலை நாம் அடையாளம் காணும் பொது, இது நமக்கு கிடைக்கிறது. பல வாசல்கள் இருந்தாலும் நான் பொதுவான இரண்டு வாசல்களை மட்டும் எடுத்து கூறப்போகிறேன். முதலாவது வாசல் கசப்பு மற்றும் மன்னியாதன்மை. நமக்கு மிகவும் நெருக்கமாயிருக்கும் நபர்கள் மேல் கசந்துக்கொண்டு, அவர்களை மன்னிக்க விருப்பமில்லாதிருப்பது, பொதுவான ஒன்று தான். விசேஷமாக, பெற்றோர், கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள், அண்டை வீட்டார் அல்லது சபை போதகர் மேல் இப்படிப்பட்ட உணர்வு பொதுவாக ஏற்படலாம். இரண்டாவது வாசல், தேவனுக்கு விரோதமாக கலக மனநிலையுடயவர்களாக இருப்பதாகும். நம்முடைய கலகம் அல்லது விரோதம், சமுதாயம் அல்லது மனித அதிகாரத்திற்கு எதிராக இருக்கலாம். ஆனால் உண்மையை சொன்னால் அது தேவனுக்கு விரோதமான கலகமாகும் - அவருடைய நீதியுள்ள ஆளுகைக்கு விட்டுக்கொடுக்க மறுத்தல் ஆகும்.

கதவை மூடுதல்

எந்த கதவு திறந்திருக்கிறதென்பதை புரிந்துக்கொண்ட உடன், அதை மூடுவதால் தான் தீர்வு ஆரம்பமாகிறது. அந்த கதவு கசப்பு மற்றும் மன்னியா தன்மையாக இருந்தால், நாம் யார் மேல் கசப்புக்கொண்டிருக்கிறோமோ, அந்த நபரை மன்னிக்க வேண்டும். நம்முடைய கசப்பையும், வெறுப்பையும் நாம் விட்டுவிட வேண்டும். கர்த்தருடைய ஜெபத்தில், இயேசு கூறுகிறார்:

> *எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். (மத்தேயு 6:12)*

நாம் மற்றவர்களை மன்னிப்பதை விட அதிகமாக தேவன் நம்மை மன்னிக்க வேண்டும் என்று கேட்க நமக்கு உரிமையில்லை. நாம் மற்றவர்களை எவ்வளவு மன்னிக்கிறோமோ, தேவன் அவ்வளவு தான் நம்மையும் மன்னிப்பார்.

இயேசு சொன்னார்

மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். (மத்தேயு 6:14 - 15)

நாம் தேவனிடமிருந்து மன்னிப்பை பெற விரும்பினால், நாமும் மற்றவர்களை மன்னிக்க வேண்டும். தேவன் அந்த நிபந்தனையை முன் வைத்திருக்கிறார், அதை அவர் மாற்ற மாட்டார். மறந்துவிடாதீர்கள், மன்னிப்பு ஒரு உணர்வல்ல, அது ஒரு தீர்மானமாகும். ஒரு விதத்தில், உங்களுக்கு கடன்பட்டிருப்பவனின் கடன் பத்திரத்தை கிழித்தெறிவது போலாகும். மற்றவர்களை மன்னிப்பதே, முதல் கதவை மூடுவதற்கான வழியாகும். உங்கள் பிரச்சனை தேவனுக்கு விரோதமான கலகமாக இருக்குமானால், அந்த கதவை மூடுவதற்கு ஒரே வழி, தேவனுக்கு விட்டுக்கொடுப்பதாகும். மறுபடியும், இது உங்கள் சுய சித்தத்தின் தீர்மானமாகும். யாக்கோபு 4:7ல் கூறப்பட்டுள்ளதை பார்க்கும் போது, இதை நாம் அங்கு காணலாம்:

> *ஆகையால், தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். (யாக்கோபு 4:7)*

தேவனுக்கு நீங்கள் எதிர்த்து நிற்கும் வரை, நீங்கள் பிசாசுக்கு எதிர்த்து நிற்க முடியாது - ஏனென்றால், தேவன் ஒருவர் தான் பிசாசை எதிர்பதற்கான விசுவாசத்தையும், பெலத்தையும் கிருபையையும் கொடுக்க முடியும். ஆகவே

பிசாசு உங்களை சித்திரவதை செய்தால், தேவனுக்கு உங்களை விட்டுக்கொடுங்கள். இது உங்கள் சுய சித்தத்தின் தீர்மானமாக இருக்கிறது. உங்கள் கலகத்தை விட்டுவிட்டு, "தேவனே நான் உமக்கு அர்ப்பணிக்கிறேன். நீர் என் சிருஷ்டிகர். நீரே இப்பிரபஞ்சத்தை நடத்துபவர். என் வாழ்க்கையில் உம்முடைய இடைப்படுதலுக்கு நான் விட்டுக்கொடுக்கிறேன். நீர் விரும்புவதை நான் முழுவதும் நிறைவேற்றுவேன்." என்று கூறுங்கள். அந்த நொடியில், நீங்கள் ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையை எடுத்து - வனாந்திர அனுபவத்தில் இயேசு செய்தது போல் - பிசாசை உங்கள் வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்த முடியும். ஒவ்வொரு முறையும் "எழுதியிருக்கிறபடி. . .எழுதியிருக்கிறபடி. . .எழுதியிருக்கிறபடி. . ." என்று இயேசு அவனுக்கு பதில் கொடுத்தார்.

இயேசு தேவனுக்கு கீழ்படிந்தார். ஆகையால் தான் அவர் பிசாசுக்கு எதிர்த்து நின்றார். நீங்களும் இயேசுவை போல், தேவனுக்கு கீழ்படிந்திருந்தால், அப்போது பிசாசுக்கு எதிர்த்து நிற்க உங்களுக்கும் உரிமை உண்டு. "நான் இனி உனக்கு செவி கொடுக்க மாட்டேன். சாத்தானே என் வாழ்க்கையை விட்டு வெளியேறு! நான் தேவனுக்கு ஒப்புவித்திருக்கிறேன். நான் அவருக்கே சொந்தம். என் மீது உனக்கு வல்லமை இல்லை! சிலுவையில் இயேசுவின் மரணத்தால், எனக்கு விரோதமான எல்லா உரிமைக்கோரல்களும் செலுத்தப்பட்டு தீர்க்கப்பட்டன. நான் உனக்கு எதிர்த்து நின்று, என்னை விட்டு புறப்பட்டு போகும்படி கட்டளைக்கொடுக்கிறேன்" என்று அந்த குரல்களிடம் சொல்ல உங்களுக்கு இப்போது உரிமை உண்டு.

தேவனோடு சமாதானம்

மன ரீதியிலான சித்திரவதையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய அவசியத்தை குறித்து, இது வரை பேசினோம். ஆனால் அதின் இறுதி விளைவு என்ன? அதற்கு பதில்: உண்மையான மன அமைதி என்பதாகும். நாம் மன உபாதையிலிருந்து விடுதலை பெற்ற பின், உண்மையான மன அமைதியை அனுபவிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல உள்ளன - ஒரு பக்கம் உள்ள மன உபாதை, எதிர்மறையானது. அடுத்த பக்கம் உள்ள உண்மையான மன அமைதியை அனுபவிப்பதோ, நேர்மறையானது. நமக்கு தேவையான முதன்மையான மற்றும் மிக முக்கியமான மன அமைதி என்னவென்றால், தேவனோடு நமக்கு சமாதானம் உண்டென்று அறிந்துக்கொள்வது தான். சர்வவல்லமையுள்ள தேவனுடன் சரியான உறவின்றி உண்மையான, நிரந்திர சமாதானம் உண்டாக முடியாது.

"துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை" என்று வேதாகமம் ஏசாயாவில் கூறுகிறது. தேவனுக்கு எதிர்த்தோ, தேவனுடைய நிபந்தனைகளுக்கு கீழ்பயாமல் இருக்கும் வாழ்வைக்கொண்ட நபர்களுக்கு சமாதானம் இல்லை. ஆகையால், நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோமா என்பதை உறுதி செய்து கொள்வது அவசியம். ரோமரில் பவுல் கூறுகிறார்: நாம் விசுவாசத்தினால் நீதிமாங்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம்பெற்றிருக்கிறோம்..

(ரோமர் 5:1)

ரோமர் 5 வசனம் 1 இல், இயேசு மூலமாக நாம் "ஒப்புரவாகுதலை பெற்றிருக்கிறோம்" என்று பவுல் கூறுகிறார். ஒப்புரவாகுதல் என்ற வார்த்தை, நாம் தேவனோடு காரியங்களை சரி செய்ய வேண்டிய அவசியத்தை குறிக்கிறது. நம்முடைய மாம்சீக தன்மையினாலும் பாவ வாழ்வினாலும், நாம் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு எதிராக யுத்தம் செய்கிறோம். இயேசுவின் மூலமாக, தேவன் நமக்களிக்கும் ஒப்புரவாகுதலை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய இரட்சகர், நம்முடைய பாவங்களுக்கான முழுமையான மற்றும் பூரணமான தண்டனையை செலுத்தினார். இதனால் நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். ஒப்புரவாக்கப்பட்டு, தேவனுடைய மன்னிப்பின் வாக்குத்தத்தத்தையும் பெற்று, நான் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். இதன் விளைவாக, நாம் இப்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலம் தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறோம். "நீதிமானாக்கப்பட்டு" என்பது மிக முக்கியமான வார்த்தை. விடுவிக்கப்பட்டு, இனி குற்றவளியல்ல என்ற தீர்ப்பை பெற்று என்று அதற்கு அர்த்தம் கொடுக்கலாம். நாம் இயேசுவிலும், நம்முடைய சார்பாக அவருடைய மரணத்திலும் விசுவாசம் வைக்கும் போது, நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையில் அவருடைய நீதி நமக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. விசுவாசிப்பது உங்களுக்கு கடினமாக இருந்தால், பின் வரும் வாக்கியங்களை மறுபடியும், மறுபடியும் சொல்லுங்கள்:

> *"இயேசுவின் மரணத்தினால், நான் பாவமே செய்யாதது போல், நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன். தேவனுக்கு இப்போது எனக்கு விரோதமாக ஒன்றும் இல்லை. நான் முற்றிலும் விடுவிக்கப்பட்டுள்ளேன்."*

இந்த உண்மை மன அமைதிக்கான மிக பெரிய அடிப்படையாகும். இதை நாம் அறிந்திருந்தால், தேவனை நம்முடைய பட்சத்தில் கொண்டிருப்போம் - அதுவே நம்முடைய வாழ்வில் பெரிய வித்தியாசத்தை உண்டுப்பண்ணும்.

தேவன் நமது பட்சத்திலிருக்கிறார்

இந்த உறுதியான நம்பிக்கையை பவுல் ரோமர் 8:31-32ல் வெளிப்படுத்துகிறார்:

இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

வசனம் 31 மிக அறுமையான கேள்வியை கேட்கிறது. தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாக இருப்பவன் யார்? இதை ஒருவர் இப்படியாக சொன்னார்: எந்த சூழ்நிலையிலும், தேவனோடு ஒருவர் இருந்தால், அவர்கள் தான் பெரும்பான்மை. தேவன் இயேசுவை - அவருடைய மிக விலையேறபெற்ற பொக்கிஷம், அவருடைய ஒரே பேரான குமாரனை - கொடுக்க ஆயத்தமாயிருந்தபடியால், அப்படிப்பட்ட அன்பு, நம்மிடத்திலிருந்து எதையும் தடை செய்யாது என்பதை அறிந்திருக்கிறோம். தேவன் இயேசுவையே கொடுப்பாரானால், நம்மிடமிருந்து எந்த நன்மையையும் அவர் தடை செய்ய மாட்டார். தேவன் நமது பட்சத்திலிருக்கிறார். அவர் நமக்காக

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி *secretary@derekprince.in* அல்லது

அலைபேசி *9585538202* தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில்

பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் கவனத்திற்கு!!!

உங்கள் விலாசம் மாறும்பொழுது தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

WANT MORE?

- ○ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- ○ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- ○ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்..

See over for address details...

SIGN ME UP!

○ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.

- ○ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- ○ கடிதம் மூலமாக அனுப்பவும்

நிற்கிறார். பரலோகத்தில் பொருள் எல்லாம் நம்முடைய வசத்தில்தான் இருக்கிறது. இதுவே மன அமைதிக்கு உண்மையான அடிப்படையாகும். நாம் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் - நீதிமானாக்கப்பட்டிருக்கிறோம் (பாவமே செய்யாதது போல்) என்பதை விசுவாசத்தினால் பற்றிக்கொள்ளும்போது - நம்முடைய மன சமாதானத்திற்கு தேவன் செய்திருக்கும் முழு ஏற்பாடையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். இதை பிலிப்பியரின் நிருபத்தில் பவுல் தெளிவாக எடுத்துரைக்கிறார்:

நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். (பிலிப்பியர் 4:6 - 7)

“எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” என்ற அந்த அருமையான வாக்கியத்தை கவனியுங்கள். உங்கள் மனதை காலியாகவோ, பாதுகாப்பில்லாமலோ விட்டுவிட்டால், பொல்லாத தாக்கம் அல்லது அழுத்தம் உள்ளே நுழைய இடம் உண்டாகலாம். ஆகவே நீங்கள் அதை தேவ சமாதானத்தால் நிரப்ப வேண்டும் - அந்த சமாதானம் உங்கள் மனதை காத்துக்கொள்ளும். காத்துக்கொள்ளும் என்பதற்கான கிரேக்க வார்த்தையின் உண்மையான அர்த்தம், “உங்கள் மனதை பாதுகாப்பு அரண்களால்” சூழ்வதாகும். உங்கள் மனதை நீங்கள் பாதுகாக்க வேண்டும் - அதற்குள் நுழைய விரும்பும் பொல்லாத அழுத்தங்கள் அல்லது உபாதிக்கும் சக்திகளிலிருந்து தற்காக்க வேண்டும். நம்முடைய மனதை பாதுகாக்க சில குறிப்பிட்ட வழிமுறைகளை நாம் சிந்திக்கலாம்.

நான்கு குறிப்பிட்ட படிகள்

“தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்” என்ற அருமையான வாக்குத்தத்தத்தை நாம் அறிக்கை செய்கிறோம். ஆனால் அந்த வாகுத்தத்தை சுதந்தரிக்க, அதினோடு இணைந்திருக்கும் நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டும்.

முதலாவது நிபந்தனை: பதற்றத்தை தவிர்த்து விடுங்கள். “ஒன்றுக்கும் கவலைப்படாமல்.” ஒவ்வொரு முறையும் பதற்றம் உங்கள் மனதிற்குள் நுழைய முற்படும் போது, அதை நிரகரியுங்கள். “நான் பாவமே செய்யாதது போல் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன். தேவன் எனக்கு விரோதமான ஒன்றையும் வைத்திருக்கவில்லை. தேவனோடு எனக்கு சமாதானம் உண்டு. தேவன் என் பட்சத்திலிருக்கிறார். தேவனுடைய சகல வளங்களும் எனக்கு உள்ளன. நான் பதற்றமடைய மாட்டேன். நான் அதை விசுவாசிக்கும் போது பதற்றம் அடைவது, விவேகமான செயல் அல்ல” என்று கூறுங்கள்.

இரண்டாவது நிபந்தனை: எல்லாவற்றையுங்குறித்து ஜெபம் பண்ணுங்கள். இந்த பழைய ஆங்கில பாமாலை உங்களுக்கு நினைவிருக்கும்:

ஆ, என்ன சமாதானம் இழக்கின்றோம்

ஆ, என்ன தேவையற்ற வேதனை சுமக்கின்றோம்

ஜெபத்தில் யாவையும் தேவனிடம்

கொண்டு செல்லாததினால்

பல நேரங்களில், மன சமாதானமின்மைக்கு காரணம் நம்முடைய ஜெபக்குறைவு தான். பிரச்சனை எழுந்தவுடன், அதை சுயமாய் கையாள முற்படுகிறோம். தேவனுடைய ஞானத்தையும், அவருடைய வளங்களையும் நாடாமல், தீர்வு காண முற்படுகிறோம். ஜெபித்தால் அவை யாவும் நமக்கு வழங்கப்படுகின்றன (ஞானமும், வளங்களும்.)

மூன்றவது நிபந்தனை: எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருங்கள். இது அத்தியாவசியமான ஒன்று. ஜெபிப்பது நல்லது; ஆனால் நன்றியோடு தான் தேவனிடம் நாம் ஜெபிக்க வேண்டும். நன்றியுள்ள இருதயம் பொதுவாக சமாதானம் நிறைந்த இருதயமாக இருக்கும். ஆனால் நன்றியில்லாத நபர், உண்மையான மற்றும் நிலைத்திருக்கும் சமாதானத்தை அறிந்துக்கொள்ள முடியாது. நன்றியற்றிருப்பது, தேவனுடைய முழு தன்மைக்கும் எதிரானது.

நான்காவது நிபந்தனை: சரியானவைகளையே சிந்தியுங்கள். பிலிப்பியர் 4:8ல், அந்த சரியானவைகளின் பட்டியலை பவுல் கொடுக்கிறார். “உண்மையுள்ளவைகள் எவைகளோ” என்று முதலாவது கூருகிறார். அதே நேரத்தில் சில உண்மையுள்ளவைகளை நாம் அதிகம் சிந்திக்க கூடாதென்பதையும் மனதில் கொள்ளுங்கள். உதாரணத்திற்கு, மற்றவர்களுடைய குறைவுகள் மற்றும் உதவ தவறுதல் - இவைகள் உண்மையென்றாலும் அவைகளை சிந்திக்க கூடாது. அதற்கு பின் எவைகளை சிந்திக்க வேண்டும் என்பதை பவுல் அந்த பட்டியலில் சேர்க்கிறார்: ஒழுக்கமுள்ளவைகள், நீதியுள்ளவைகள், கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள், நற்கீர்த்தியுள்ளவைகள், புண்ணியம் மற்றும் புகழ்.

“இவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்” என்று பவுல் கூறுகிறார். நீங்கள் தேர்ந்தெடுப்பவைகளின் மேல் உங்கள் மனதை செலுத்த உங்களுக்கு வல்லமை உண்டு. எதிர்மறையானவைகளையும் நீங்கள் சிந்திக்கலாம் அல்லது உங்களை கட்டி எழுப்பும் காரியங்களில் கவனம் செலுத்தலாம். நேர்மறையான மற்றும் கட்டி எழுப்பும் காரியங்களை நீங்கள் நாடினால், அவைகளை கண்டுப்பிடிக்க பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார்.

மன சமாதானத்திற்காக ஜெபித்தல்

மன உபாதையை மேற்கொண்டு, மன சமாதானத்தை அனுபவிக்க செயல்முறையான அடிகளை நீங்கள் எடுத்து வைக்க விரும்பினால், பின் வரும் ஜெபத்தின் மூலம் நீங்கள் அதை ஆண்டவருக்கு தெரியப்படுத்தலாம்:

ஆண்டவரே, மன உபாதையை மேற்கொண்டு, உண்மையான மன சமாதானத்திற்குள் பிரவேசிக்க முடியும் என்று நான் உணருகிறேன். என்னை குற்றப்படுத்தும் சத்துருவின் குரலை கடிந்துக்கொண்டு, எதிர்க்க, நான் இப்போது அடி எடுத்து வைக்கிறேன். நீர் என் பட்சத்திலிருக்கிறீர் என்பதை அறிக்கை செய்கிறேன் தேவனே. நான் கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, உம்முடன் சமாதானம் பெற்றிருக்கிறேன். நான் பதற்றத்தை துரக்கின்றேன். பிரச்சனைகள் வரும் போது நான் முதலாவது ஜெபிப்பேன். நீர் எனக்காக செய்த யாவற்றிற்காகவும் நான் நன்றி செலுத்துவேன். என் எண்ணங்களை நன்மையான, உண்மையான மற்றும் தூய்மையானவைகளின் மேல் செலுத்துவேன்.

மன உபாதையிலிருந்து தப்பி, உண்மையான மன சமாதானம் பெற உம்முடைய வார்த்தையிலிருந்து நீர் எனக்கு தந்த படிகளுக்காக நன்றி. அந்த சமாதானத்தை நான் இன்று தேர்ந்தெடுத்து, விசுவாசத்தினால் அதற்குள் அடி எடுத்து வைக்கிறேன். ஆமென்.

YOUR DETAILS

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

A contribution to help cover our costs is always appreciated :

My gift enclosed: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538202
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017